இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

தொழிலுரிமைத்துவமும் சிறிய வியாபார முகாமைத்துவமும்

இறுதிப் பரீட்சை - 2005/2006

**MCC** 1105 – செயற்பாடு முகாமைத்துவ அறிக்கை

காலம்: இரண்டு(02) மணித்தியாலங்கள்

---

திகதி: 25.02.2006 நேரம்: மு.ப 10.00 - ந.ப 12..00 வரை

---

இவ்வினாப்பத்திரம் ஐந்து கேள்விகளைக் கொண்டுள்ளது. எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்கவும். எப்பொழுதும் ஒவ்வொரு விடையினையும் புது விடைத்தாளில் ஆரம்பிக்கவும்.

1. (அ) ஓர் உற்பத்தி முறைமையின் உள்ளீடு, செயன்முறை, வெளியீடு என்பனவற்றை விளக்குக. அத்துடன் ஒரு தனியார் துறை பகிரங்க போக்குவரத்து வணிகத்தின் உற்பத்தி முறையினை தகுந்த உதாரணங்களைக் கொண்டு விளக்குக.

(ஆ) பண்டங்கள், சேவைகளிடையேயுள்ள அடிப்படை வேறுபாடுகளை விளக்குக.

(இ) உற்பத்தி பொருள் ஆக்கத்தின் போது கடைப்பிடிக்கப்படும் கண்காணிப்பு நடைமுறைகளை விளக்குக. கண்காணித்தலின் பிரதான பிரிவுகளை சுருக்கமாக விளக்குக.

(25 புள்ளிகள்)

2. ஓர் உற்பத்திப் பொருளை அல்லது சேவையைப் பயன்படுத்துவோர்கள் தனிப்பட்டவர்களாகவோ அல்லது நிறுவகங்களாகவோ இருக்கலாம்.

(அ) பொருள்களை அல்லது சேவைகளைத் தங்களின் பாவனைக்காக விலைக்கு வாங்கும் வெவ்வேறு வகையான நிறுவகங்களை சுருக்கமாக விளக்குக.

(ஆ) ஒரு உற்பத்தியாளர் ஓர் உற்பத்திப்பொருள் அல்லது சேவையின் வழங்குமுன் பாவனையாளர் தேவையினை மதிப்பிடும் பொழுது கண்காணிக்க வேண்டிய காரணிகளை விளக்குக.

(இ) ஓர் புதவகையான வேக்கரி உற்பத்திப்பொருள் தொகுயொன்றினை உற்பத்தி செய்யும் முன், அதன் பாவனையாளர் தேவைகளை மதிப்பிட நீர் அவதானிக்க வேண்டிய காரணிகள் யாவை?

(25 புள்ளிகள்)

3. ஓர் பொருளின் உற்பத்தி, தொழிற்சாலையில் இடம்பெறும் முன், அதன் ஆக்கத்தின் விருத்தியானது உற்பத்தி பொருள் வடிவமைப்பு, உற்பத்திப் பொருள் உருவாக்கம் ஆகிய இரு கட்டங்களினூடாக நடைபெறுகின்றது.

(அ) உற்பத்தி பொருள் விருத்தியின் இரு கட்டங்களை உரிய விளக்கங்களைக் கொண்டு விபரிக்குக.

(ஆ) உமக்குப் பரிட்சயமான ஏதாவதொரு சிறு கைத்தொழிலை உதாரணமாகக் கொண்டு உற்பத்தி பொருள் அபிவிருத்தி முறையினை விளக்குக.

(இ) ஒரு தொழில் முயற்சியாளருக்கு அவரின் உற்பத்தி பொருள் விருத்தியின் பொருட்டு உதவவுள்ள நிறு வனங்களைக் குறிப்பிடுக.

(25 புள்ளிகள்)

4. ஓர் பொருள் உற்பத்தியாளர் ஒரு பொறித் தொகுதிக்குத் தகுதியான ஒரு நிலையத்தை தெரிவு செய்ய வேண்டியுள்ளர். அவர் தனது உத்தேசித்த வணிகத் தொழிலைப் பாதிக்கும் பல்வேறு பொருளாதார குணாம்ச, உற்பத்தி தொகையளவுக் காரணிகளையும் நிச்சயிக்க வேண்டியுள்ளது.

(அ) ஓர் பொருள் உற்பத்தியாளர் ஒரு பொறித் தொகுதிக்கான தகுந்த நிலையத்தை தேர்ந்தெடுக்கும் பொழுது நிச்சயிக்க வேண்டிய காரணிகளை விபரிக்க.

(ஆ) ஒரு வணிகத்திற்கான ஒரு தளக்கோலத்தினை தெரிவுசெய்யும் பொழுது அவர் கவனத்தில் கொள்ள வேண்டிய வேறு காரணிகள் யாவை?

(இ) ஒரு சிறிய/மத்திய அளவிலான உணவு வணிகத்திற்குரிய தகுதியான நிலையம், தளக்கோலம் ஆகியவற்றினைத் தெரிவு செய்யும் பொழுது நீர் கவனதிலெடுக்க வேண்டிய காரணிகளை விபரிக்க.

(25 புள்ளிகள்)

5. பின்வருவனவற்றிக்கு விடையளிக்குக.

(அ) 18ம் நூற்றாண்டில் ஏற்பட்ட கைத்தொழில் புரட்சியினால் பொருள் உற்பத்தி முறைகளில் ஏற்பட்ட தாக்கங்களை விபரக்குக.

(ஆ) "கட்டளை பொருள் உற்பத்தி" (Order Production),
"இருப்பு சரக்கு உற்பத்தி"(Stock Production),

என்பனவற்றை இனம் கண்டு விபரிக்க.

(இ) "தொடர்ச்சியான" , "இடைவிட்டு" , வழக்கீட்டு உற்பத்திகளை சுருக்கமாக விளக்குக.

(ஈ) தரக்கட்டுப்பாடு செய்கையின் மூன்று பெரும் கட்டங்களை விபரக்க.

(25 புள்ளிகள்)

(பதிப்புரிமையுடையது)